பொறுத்தவரையில், வனத் துறையினுடைய நிலங்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், நிலம் கையகப்படுத்துவது சிரமமாக இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய ஏழை எளிய மாணவர்கள் பயன்பெற வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இதுவரையில் இல்லாத அளவிற்கு 4 பொறியியல் கல்லூரிகளைத் தந்து தமிழகத்திற்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பொறியியல் கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்கான இடங்கள் ஏற்கெனவே கூடுதலாக இருக்கின்ற காரணத்தினால், புதியதாக ஒரு பொறியியல் கல்லூரியைத் தொடங்க வேண்டுமென்ற கருத்துரு அரசிடம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 50 மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

50—

அலுவலகக் கட்டடம்

***3923—திரு. வி.சி. ஆறுக்குட்டி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் (வடக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர் (வடக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் மற்றும் ஓட்டுநர் தேர்வுத்தளம் அமைக்க நிலம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. உரிய இடம் தேர்வு செய்யப்பட்டபின் மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்

வழிகாட்டுதலின்படி சொந்தக் கட்டடம் மற்றும் ஓட்டுநர் தேர்வுத்தளம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.

திரு. வி.சி. ஆறுக்குட்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் காவல் தெய்வம், கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். என்னுடைய தொகுதிக்குட்பட்ட துடியலூர் பகுதியிலே வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்றது. அந்த இடத்தில் போக்குவரத்து நெருக்கடி அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அருகிலே இருக்கின்ற சரவணம்பட்டி பகுதியிலே இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான 10 ஏக்கர் நிலம் உள்ள இடத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்ற வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், பகுதி அலுவலகம், சோதனைச் சாவடிகள், போக்குவரத்து இணை ஆணையர் அலுவலகம் உள்ளிட்ட 32 அலுவலகங்களுக்கு 35 கோடி ரூபாய் நிதியை வழங்கி, பல்வேறு கட்டடப் பணிகள் மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்டு இன்று அவை பயன்பாட்டில் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற கோயம்புத்தூர் வடக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு இடம் தேர்வு செய்கின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சட்டமன்றத் தொகுதியில் அரசு நிலத்தைத் தேர்வு செய்து

2015 பிப்ரவரி 23]

கொடுத்தால், மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி சொந்தக் கட்டடம் கட்டுவதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.

திரு. வி.சி. ஆறுக்குட்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கார்ப்பரேஷன் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால் அங்கே அரசு நிலம் இல்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிலத்தைத் தேர்வு செய்து, உடனடியாகக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் வடக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் உரிய இடம் கேட்டு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பதில் வரப்பெற்றதும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்த்தாண்டம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் இல்லை. அது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. விளவங்கோடு பேரூராட்சியிலே அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பணி எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

[2015 பிப்ரவரி 23

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், போக்குவரத்து இணை ஆணையர் அலுவலகம், போக்குவரத்து துணை ஆணையர் அலுவலகம் உள்ளிட்ட அனைத்து அலுவலகங்களும் சொந்தக் கட்டடத்தில் இயங்க வேண்டுமென்று மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு, ஒவ்வோர் ஆண்டும் படிப்படியாக கட்டடப் பணிகளுக்கான நிதி வழங்கப்பட்டு, பணிகள் எடுக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய அலுவலகத்திற்கு இடம் தேர்வு செய்யும்பொருட்டு மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கருத்துரு அனுப்பப்பட்டு, இடம் தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. போக்குவரத்துத் துறைக்கு இடம் ஒப்படைக்கப்பட்டபின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

51—

கரும்பு ஆராய்ச்சி நிலையம்

***54799—திரு. துரை. மணிவேல்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் மாவட்டம், வாரணவாசி ஊராட்சி, சமத்துவபுரம் அருகே கரும்பு ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?